**செய்தி வெளியீடு எண்: 66** **நாள்:14.05.2021**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று **(14.5.2021)** தலைமைச் செயலகத்தில், TAFE குழும நிறுவனங்களின் தலைவர் திரு. டி.ஆர். கேசவன் மற்றும் கம்பெனி விவகாரங்கள் தலைவர் திரு. எஸ்.வி. ராஜீவா நாக் ஆகியோர் சந்தித்து, கொரோனா சிகிச்சைக்காக சிறிய மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு **500** ஆக்சிஜன் செறிவூட்டிகளை (oxygen concentrators) வழங்கிடும் வகையில், முதற்கட்டமாக **50** ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்கப்பட்டு, மீதமுள்ள ஆக்சிஜன் செறிவூட்டிகளை வழங்குவது தொடர்பான கடிதத்தை வழங்கினார்கள்.

கொரோனா கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவும் வகையில். கடந்த ஆண்டு TAFE நிறுவனம் வாடகை கட்டணம் ஏதுமின்றி டிராக்டர்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை விவசாய பயன்பாட்டிற்காக வழங்கியது. அதேபோன்று, **2021**–ஆம் ஆண்டும், **2** ஏக்கர் வரை விவசாய நிலம் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு TAFE நிறுவனம் மே மற்றும் ஜுன் மாதங்களில் வாடகை கட்டணம் ஏதுமின்றி டிராக்டர்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வழங்க வேளாண்மை–உழவர் நலத்துறையின் அனுமதி வேண்டி கடிதத்தை வழங்கினார்கள்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**